# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.32/2023

### அ.சா. 14 (LW 17 )

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **திரு. ராமகிருஷ்ணன்** | **தொழில்** | **சார்பு ஆய்வாளர்** |
| **த/ பெயர்** | பழனிச்சாமி | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலூகா** | | **தேதி** | **03.03.2026** |

1873 ம் வருடத்திய சட்டம் பிரிவு 10 ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 .2 எதிரிகள் ஆஜர்.

மொழிபெயர்ப்பாளர் திரு. அரவிந்தன் முன்னிலையில் பின்வருமாறு சாட்சிகளின் விசாரணை நடத்தப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது பட்டிவீரன் பட்டி காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 26.08.20222022 அன்று நான் வடமதுரை காவல்நிலையத்தில் காவலராக பணியிலிருந்த போது 12.30 மணி முதல் 02.30 மணி வரை வழக்கில் கொலையுண்டு இறந்து போன ராம்குமார் என்பவரது பிரேதத்தை அங்க மச்ச அடையாளம் காட்டி பிரேத பரிசோதனை செய்ய வேண்டி ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தை திண்டுக்கல் அரசு மருத்துவமனை அலுவல் மருத்துவரிடம் கொடுத்தேன். நான் கொடுத்த வேண்டுகோள் கடிதம் ஏற்கனவே **அ.த.சா.ஆ. 4**.ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதன் பின்பு பிதேத்தை அங்க , அடையாளம் காட்டி மருத்துவருக்கு பிரேத பரிசோதனை செய்ய உதவியாக இருந்தேன். பிரேத பரிசோதனை முடிந்த பின்பு பிரேதத்தில் வெட்டி எடுக்கப்பட்ட உடைகள் மற்றும் உள்ளுறுப்புக்களை ஆய்வாளரிடம் அறிக்கை சமர்ப்பித்தேன். பின்பு உடைகள் மற்றும் உள்ளுறுப்புக்களை இரசயான பகுப்பாய்வுக்காக மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு ஆய்வாளர் வேண்டுகோள் கடிதத்துடன் சமர்ப்பித்தேன். அந்த வேண்டுகோள் கடிதம் **அ.த.சா.ஆ.11.** ஆகும். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

கடவுச் சீட்டை நான் கடந்த 26.08.2022 அன்று காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். வழக்கில் இறந்த ராம்குமாரை இதற்கு முன்பு பார்த்தது இல்லை. ஆய்வாளர் எத்தனை மணிக்கு என்னிடம் 11.30 மணிக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்தார். பிரேதமானது திண்டுக்கல் அரசு மருத்துவமனை சவக்கிடங்கில்தான் இருந்தது. சவக்கிடங்கிற்கு பிரேதத்தை யார் கொண்டு போய் சேர்த்தது என்பது எனக்கு தெரியாது. பிரேதத்தை சவக்கிடங்கில் கொலையுண்டு இறந்த பிரேதத்தை முதன் முதலில் பார்த்தேன். பிரேதத்தின் முகம், தலையானது அடையாளம் தெரியாத

வகையில் சிதைந்து காணப்பட்டது. மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு செல்வதற்கு தடய சொத்துக்கள் யாரால் முறையாக பேக்கிக் செய்யப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. வழக்கு சம்மந்தமாக என்னை காவல் ஆய்வாளர் எந்த தேதியில் விசாரித்தார் என்றால் விசாரிக்கவில்லை.

**மறு விசாரணை இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.03.03 20:25:25 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.